

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர், சிவகங்கை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற 9 முதல் 12வகுப்பு பயிலும் மாணவிகளுக்கான இணைய பாதுகாப்பு குறித்து பள்ளிகளின் பெண் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டி பயிற்சியான அகல் விளக்கு நிகழ்ச்சியில் பங்கேற்று, விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்வினை தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கா.பொற்கொடி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் , மாநிலக்கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் மா.இராமகிருஷ்ணன் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) மாரிமுத்து உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்ட ஆலோசனைக் கூட்டம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்றார்!

நெல்லை, செப். 25 –

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் இரா.சுகுமார் முன்னிலையில் துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பணிகள் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்ததாவது.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்டம் தொடர்பாக அலுவலர் களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு திட்டத்தை விரைவுப் படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ள இராதாபுரம் நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிகள் உட்பட்ட 831 கிராமங்களுக்கு வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் தொடர்பாக ரூபாய் 605 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.குட்டம் முதல் இராதாபுரம் வரையில் அமைந்திருக்கும் அனைத்து ஊராட்சிகளுக்கு தண்ணீர் கொடுக்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் ஒரு மாதத்தில் தொடங்கி வைக்க உள்ளார்.அடுத்த கட்ட திட்டத்தை அடுத்த 30 நாட்களுக்குள் பணி முடிந்து பொதுமக்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அர்ப்பணிப்பார்.

ஜி.எஸ்.டி.வரி விலக்கு வழங்கி தீபாவளி பரிசாக பிரதமர் அறிவித்துள்ளார்.ஆண்டுக்கு 2.5 லட்சம் கோடி ரூபாய் சலுகை கிடைக்க உள்ளது.இதனால் மக்கள் சேமிப்பு உயரும் என பிரதமர் சொல்கிறார்.8 ஆண்டு காலமாக அவர்கள் வைத்த 20 லட்சம் கோடி ரூபாய் எங்கு சென்றது என பிரதமரிடம் கேளுங்கள்.தேசிய கல்வி கொள்கையை ஏற்காததால் நிதியை வழங்கவில்லை என ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவிக் கிறார்.பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலமான மகாராஷ்டிராவில் மும்மொழி கொள்கை ஏற்கப்பட வில்லை. ஆனால் அங்கு நிதி கொடுக்கப்பட்டு ள்ளது.ஒன்றிய அரசு கொடுக்கும் நிதியை முறையாக கொடுக்க வேண்டும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு எந்த மாநிலத்தையும் நடத்தக்கூடாது. நேரு ஆட்சி காலத்தில் கொண்டு வந்த இருமுடி கொள்கை தான் இன்று வரை தமிழகத்தில் செயல்படுத்தப் படுகிறது.ஒருபோதும் இந்தியையும் ஏற்க மாட்டோம்,மும்மொழிக் கொள்கையையும் ஏற்க மாட்டோம்.

அரசு பள்ளிகள் குறித்து ஆளுநர் ஐயோ பாவம் எதுவும் தெரியாமல் எழுதி கொடுத்ததை பேசுகிறார்.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சுற்றுப்பயணத்தின் போது சினிமாவில் பேசுவதை போல் பேசுகிறார்.அகந்தையோடு அவர் பேசி வருகிறார்.அமித்ஷா சொல்லிதான் புஷ்சியானந்த மூலம் விஜய் கட்சி ஆரம்பித்துள்ளார் பின்புலத்தில் அமித்ஷா பா.ஜ.க இருக்கும் தைரியத்தில்தான் விஜய் அகந்தையோடு கூட்டங்களில் பேசுகிறார். முதல்வரை மிரட்டும் தொனியில் பேசுவதில் இருந்தே பா.ஜ.க.தான் விஜயை இயக்குகிறது என்பது தெரிய வருகிறது. பிரதமருக்கும், முதல்வருக்கும் இருக்கும் புரோட்டோகால் வேறு, விஜய்க்கு இருக்கும் புரோட்டா கால் என்பது வேறு முதல்வரை,பிரதமரை பேசும்போது கண்ணியத்துடன் கவனத்துடன் அவர் பேச வேண்டும்.தமிழக வெற்றிக் கழகத்தை கண்டு ஆளும் கட்சி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. பயப்படுபவர்களுக்கு தான் பயம் வர வேண்டும்.தமிழ்நாட்டில் யாரும் யாருக்கும் பயப்படவில்லை. இவரை போல் தலைவாபட பிரச்சினைக்கு மூன்று நாட்கள் கொடநாட்டில் காத்திருந்து காலில் விழுந்தவர்கள் நாங்கள் அல்ல. ஒன்றிய அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய நிதியை முறையாக வழங்க வேண்டும்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் தெரிவித்தார்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*இராமநாதபுரம், செப். 25 -*

*இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (26.9.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 3.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வனம் மற்றும் கதர் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜ கண்ணப்பன், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழி லாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் பரமக்குடி தொகுதி பார்வையாளர். மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் திருவா டனை தொகுதி பார்வையாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.சுதர்சன் இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர், விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.*



*ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) வாக்குச் சாவடி அளவிலான மின்னணு முகவர்கள் (Booth Level Digital Agent) BDA உள்ளிட்ட கழக தோழர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள் : கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இராமநாதபுரம் வருகை,*

*2. கழக ஆக்கப்பணிகள்*

*இவ்வாறு காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.வி.எஸ். வெங்கடேசன்

**செப்டம்பர் 25 (2024)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**காவேரிப்பட்டினம் கூட்டுறவு சங்கத் தலைவர், நகர வங்கித் தலைவர், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ஆம் ஆண்டு காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# இடஒதுக்கீடு: சமூக நீதியின் ஆணிவேர்!

திராவிட இயக்கத்தின் சித்தாந்த மாளிகை, சமூகநீதி எனும் அடித்தளத்தின் மீது கட்டப்பட்டது. அந்த அடித்தளத்தின் ஆணிவேராக, நூறாண்டுகளுக்கும் மேலாக நிலைத்து நிற்பது இடஒதுக்கீட்டுக் கொள்கையாகும். இடஒதுக்கீடு என்பது, திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை, ஒரு வேலைவாய்ப்புத் திட்டமல்ல; அது, பல நூற்றாண்டுகளாகக் கல்வி, அதிகாரம் மற்றும் சமூக மரியாதை மறுக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்களுக்கு, அவர்களின் உரிமையை மீட்டுக் கொடுக்கும் ஒரு சுயமரியாதைப் போராட்டம். நீதிக்கட்சி தொடங்கிவைத்த இந்தப் பயணத்தை, தந்தை பெரியார் ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் செதுக்கி, ஒரு முழுமையான சமூகநீதி மாதிரியாக உருவாக்கியுள்ளனர். அந்தப் போராட்டத்தின் வரலாற்றுப் பயணத்தை இந்தக் கட்டுரை ஆராய்கிறது.

**நீதிக்கட்சியின் முன்னோடிப் புரட்சி: வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை (1921)**

தமிழ்நாட்டின் சமூகநீதிப் பயணம், நூறாண்டுகளுக்கு முன்பு, நீதிக்கட்சி ஆட்சியின்போது தொடங்கியது. செப்டம்பர் 16, 1921 அன்று, நீதிக்கட்சி அரசு பிறப்பித்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை எண் 613, நவீன இந்தியாவின் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு வித்திட்டது. இந்தச் சட்டம், அரசுப் பணிகளில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் குறைத்து, அனைத்து சமூகத்தினருக்கும் பிரதிநிதித்துவம் வழங்கியது. இதன் கீழ், அரசுப் பணிகளில், பார்ப்பனரல்லாதோருக்கு 44%, பார்ப்பனர்களுக்கு 16%, இசுலாமியர்களுக்கு 16%, ஆங்கிலோஇந்தியர் மற்றும் கிறித்தவர்களுக்கு 16%, மற்றும் பட்டியல் சாதியினருக்கு 8% என இடங்கள் ஒதுக்கப்பட்டன. இது, மக்கள் தொகையின் அடிப்படையில் இல்லாவிட்டாலும், சமூக நீதியை நோக்கிய முதல் அடி என பெரியார் இதை ஆதரித்தார்.

**விடுதலைக்குப் பின் நெருக்கடி: செண்பகம் துரைராஜன் வழக்கும் முதல் சட்டத்திருத்தமும்!**

நீதிக்கட்சியின் இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கை, இந்தியா விடுதலை அடைந்த பிறகு, ஒரு பெரும் சட்ட நெருக்கடியைச் சந்தித்தது. செண்பகம் துரைராஜன் என்ற பார்ப்பனப் பெண், இடஒதுக்கீடு தனது அடிப்படை உரிமையைப் பறிப்பதாகக் கூறி, 1951ல் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவது, அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது எனத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு, தமிழ்நாட்டில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. தந்தை பெரியார், இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்தார். ஆகஸ்ட் 14, 1950 அன்று அவர் விடுத்த அறைகூவலின் பேரில், தமிழ்நாடு முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. பெரியாரின் இந்தப் போராட்டத்தின் வீரியத்தைக் கண்ட அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு தலைமையிலான ஒன்றிய அரசு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தைக் கொண்டுவந்தது. இந்தத் திருத்தம், சட்டப்பிரிவு 15(4)ஐச் சேர்த்து, சமூகரீதியாகவும், கல்விரீதியாக வும் பின்தங்கிய வகுப்பினருக்கு, அரசு சிறப்புச் சலுகைகள் வழங்கலாம் என அறிவித்தது. போராடிப் பெறப்பட்ட இந்தச் சட்டப் பாதுகாப்பே, இன்று இந்தியா முழுவதும் உள்ள இடஒதுக்கீட்டுக் கொள்கைகளுக்கு அடிப்படையாக விளங்குகிறது.

**எம்.எம்.அப்துல்லா**
*நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்*
*செயலாளர் தி.மு.க. அயலக அணி*



**பிற்படுத்தப்பட்டோர் ஆணையங்கள்: ஓர் அறிவியல் அணுகுமுறை!**

தி.மு.க. ஆட்சிக்காலத்தில், இடஒதுக்கீட்டுக் கொள்கை, வெறும் அரசாணையாக இல்லாமல், அறிவியல் பூர்வமான புள்ளி விவரங்களின் அடிப்படையில் விரிவாக்கப்பட்டது.

* ஏ.என். சட்டநாதன் ஆணையம் (1970): கலைஞர் அவர்களால், நவம்பர் 13, 1969 அன்று அமைக்கப்பட்ட முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இதுவாகும். இந்த ஆணையத்தின் பரிந்துரையின்படியே, பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 25%லிருந்து 31% ஆகவும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 18% ஆகவும் உயர்த்தப்பட்டு, மொத்த இடஒதுக்கீடு 49% ஆனது. மேலும், பிற்படுத்தப்பட்டோருக்குள்ளேயே வாரிஇருக்கும் ஏற்றத்தாழ்வுகளைக் களைய, "மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) என்ற ஒரு புதிய பிரிவை உருவாக்கவும் இந்த ஆணையம் பரிந்துரைத்தது.

* ஜெ.ஏ. அம்பாசங்கர் ஆணையம் (1982): 1982ல் அமைக்கப்பட்ட இந்த இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், வீடுவீடாகச் சென்று மிக விரிவான சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தியது. தமிழ்நாட்டின் மக்கள் தொகையில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மற்றும் சீர்மரபினர் 68% உள்ளனர் என்ற புள்ளிவிவரத்தை இந்த ஆணையம் வெளியிட்டது.

**தனி ஒதுக்கீடுகள்: சமூகநீதியை ஆழப்படுத்துதல்**

தி.மு.க. அரசுகள், சமூகநீதியின் பயன்கள் அடித்தட்டு மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய, பல உள் ஒதுக்கீடுகளையும், தனி ஒதுக்கீடுகளையும் வழங்கின.

* மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு (MBC) 20% தனி ஒதுக்கீடு (1989): வன்னியர் சமூகத்தின் இடஒதுக்கீட்டுப் போராட்டத்தை ஏற்று, கலைஞர் அவர்கள், பிற்படுத்தப்பட்டோருக்கான 50% இடஒதுக்கீட்டைப் பிரித்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20% தனி ஒதுக்கீடு வழங்கினார்.

* பழங்குடியினருக்கு 1% தனி ஒதுக்கீடு (1989): அதே ஆண்டில், பழங்குடியினருக்கு 1% தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, தமிழ்நாட்டின் மொத்த இடஒதுக்கீடு 69% ஆனது.

* அருந்ததியினருக்கு 3% உள் ஒதுக்கீடு (2009): "தலித்துகளிலேயே மிகவும் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த அருந்ததியின மக்களின் முன்னேற்றத்திற்காக, நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் ஆணையத்தின் பரிந்துரையின்படி, தாழ்த்தப்பட்டோருக்கான 18% ஒதுக்கீட்டில், 3% உள் ஒதுக்கீட்டை வழங்கி, கலைஞர் வரலாற்றுச் சாதனை படைத்தார்.

**தேசிய அளவில் சமூகநீதி: மண்டல் குழுவும் தி.மு.க.வின் பங்களிப்பும்!**

தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டுக் கொள்கை, தேசிய அளவில் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும் ஒரு முக்கிய உந்துசக்தியாக விளங்கியது. 1990ல், பிரதமர் வி.பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி அரசில் தி.மு.க. அங்கம் வகித்தபோது, மண்டல் குழு பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டும் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தினார். இது குறித்து வி.பி. சிங் அவர்கள் அனைத்து முதலமைச்சர்களுக்கும் கடிதம் எழுதிய போது, அதற்கு முதன்முதலில் விரிவான செயல்திட்டத்தோடு பதிலளித்தது, கலைஞர் தலைமையிலான தமிழ்நாடு அரசு தான். மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட பிரதமர் வி.பி. சிங் அவர்கள், மாநிலங்களவையில் பேசும்போது, "மாபெரும் தலைவர் பெரியார் அவர்களின் கனவை நனவாக்குகிறேன் எனக் குறிப்பிட்டது, திராவிட இயக்கத்தின் பங்களிப்பிற்குக் கிடைத்த தேசிய அங்கீகாரமாகும். சமூகநீதிக்காகப் பிரதமர் பதவியையே இழந்த 'சமூகநீதிக் காவலர்' வி.பி.சிங் அவர்களை கௌரவிக்கும் விதமாக, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அவரது முழு உருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

**கிரீமிலேயர் முறைக்கு எதிர்ப்பு!**

பொருளாதார ரீதியாக முன்னேறியவர்களை இடஒதுக்கீட்டிலிருந்து நீக்கும் "கிரீமிலேயர் (Creamy layer) முறையை, திராவிட இயக்கம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இடஒதுக்கீடு என்பது, வறுமை ஒழிப்புத் திட்டம் அல்ல; அது, பல நூற்றாண்டுகளாக மறுக்கப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான ஒரு சமூகநீதி ஆயுதம் என்பதே அதன் நிலைப்பாடாகும். பொருளாதாரத்தில் முன்னேறினாலும், சாதிய ரீதியிலான பாகுபாடுகள் சமூகத்தில் தொடர்வதால், பொருளாதார அளவுகோல் சமூகநீதிக்கு எதிராக அமையும் என திராவிட இயக்கம் வாதிடுகிறது.

**திராவிட மாடல் ஆட்சியில் சமூகநீதி: ஒரு புதிய பரிணாமம்!**

கலைஞர் அவர்களின் பாதையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தற்போதைய திராவிட மாடல் அரசு, சமூகநீதிக் கொள்கையை ஒரு புதிய பரிணாமத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது.

அகில இந்தியத் தொகுப்பில் 27% இடஒதுக்கீடு: பல ஆண்டுகளாக மறுக்கப்பட்டு வந்த மருத்துவப் படிப்புகளுக்கான அகில இந்தியத் தொகுப்பு இடங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) 27% இடஒதுக்கீட்டை, மாண்புமிகு முதலமைச்சர், தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நீதிமன்றத்தின் மூலம் போராடி வென்றெடுத்தது. இது, தமிழ்நாட்டு மாணவர்களுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுவதிலும் உள்ள பிற்படுத் தப்பட்ட மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரலாற்று வெற்றியாகும்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5% இடஒதுக்கீடு: அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்கள், தொழிற்கல்வி படிப்புகளில் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு 7.5% உள் ஒதுக்கீட்டை வழங்கியது.

**மகளிருக்கான இடஒதுக்கீடு**: அரசுப் பணிகளில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 30%லிருந்து 40% ஆக உயர்த்தி, பாலின சமத்துவத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

**பொருளாதார இடஒதுக்கீட்டிற்கு (EWS) எதிர்ப்பு:** சமூகநீதி என்பது சமூகரீதியாகப் பின்தங்கியிருப்பதற்கான உரிமைப் போராட்டமே தவிர, பொருளாதாரப் பிரச்சினை அல்ல என்ற உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, ஒன்றிய அரசின் 10% பொருளாதார இடஒதுக்கீட்டை திமுக அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இதற்காக, அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்து, தனது சித்தாந்த உறுதியை நிலைநாட்டியுள்ளது.

**சாதிவாரிக் கணக்கெடுப்பு:** இடஒதுக்கீட்டின் பயன்கள் சரியான முறையில் சென்றடைவதை உறுதி செய்ய, இந்தியா முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என, ஜூன் 26, 2024 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளது. திமுக உள்ளிட்ட கட்சிகளின் அழுத்தங்களுக்குப் பணிந்த ஒன்றிய பாஜக அரசு, சாதிவாரிக் கணக்கெடுப்பு விரைவில் எடுக்கப்படும் என அறிவித்துள்ளது.

**விரிவாக்கத்திற்கான கோரிக்கைகள்**

பொதுத்துறையில் வேலைவாய்ப்புகள் குறைந்து வரும் சூழலில், தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும் என தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், பதவி உயர்வுகளிலும் இடஒதுக்கீட்டை உறுதிசெய்ய வேண்டும் என்பதும் அதன் நீண்டகாலக் கோரிக்கையாகும்.

நீதிக்கட்சியின் 1921 அரசாணையில் தொடங்கி, தற்போதைய 69% இடஒதுக்கீடு வரை, தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டுப் பயணம், இந்தியாவிற்கே ஒரு முன்னோடி மாதிரியாக விளங்குகிறது. சட்டநாதன், அம்பாசங்கர் போன்ற ஆணையங்களை அமைத்து, அறிவியல் பூர்வமான தரவுகளின் அடிப்படையில் இடஒதுக்கீட்டை வடிவமைத்ததும், 9வது அட்டவணையின் மூலம் அதற்கு பாதுகாப்புப் பெற்றதும், திராவிட இயக்கத்தின் தனித்துவமான சாதனைகளாகும். சமூகநீதி என்பது வெறும் அரசியல் முழக்கம் அல்ல; அது, ஒரு தத்துவார்த்த, சட்டப்பூர்வ மற்றும் உணர்வுப்பூர்வமான கொள்கை என்பதை, இடஒதுக்கீட்டிற்காக திராவிட இயக்கம் நடத்திய இந்த நூறாண்டு காலப் போராட்டம் நிரூபித்துள்ளது. இடஒதுக்கீடே, திராவிட இயக்கத்தின் சமூகநீதிக் கொள்கைகளின் ஆணிவேராகும்.



"முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" குறித்து சேலம், கொண்டப்பநாயக்கன்பட்டி அரசு தொடக்கப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி ஆகியோர் நேற்று முன்தினம் (23.09.2025) ஆய்வு மேற்கொண்டார்கள்.